මානව සම්පත් අභිවර්ධන ආයතනය
කොළඹ විශ්වවිද්‍යාලය ශ්‍රී ලංකාව
වාර්ෂික වාර්තාව සහ වාර්ෂික ගිණුම්

2010

மனிதவள மேம்பாட்டு நிறுவனம்
கொழும்புப் பல்கலைக்கழகம், ஸ்ரீலங்கா
ஆண்டறிக்கை மற்றும் வருடாந்த கணக்குகள்

2010

INSTITITUE OF HUMAN RESOURCE ADVANCEMENT
UNIVERSITY OF COLOMBO, SRI LANKA
ANNUAL REPORT AND ANNUAL ACCOUNTS

2010

IHRA
UNIVERSITY OF COLOMBO

පටුන

		පිටු අංකය
1	2010 දෙසැම්බර් 31 දිනෙන් අවසන් වූ වර්ෂය සඳහා වාර්ෂික වාර්තාව	01 - 14
2	2010 දෙසැම්බර් 31 දිනට ශේෂ පත්‍රය	15
3	2010 දෙසැම්බර් 31 දිනෙන් අවසන් වූ වර්ෂය සඳහා ආදායම් හා වියදම් ගිණුම	16
4	විගණකාධිපති වාර්තාව	17 - 22
5	2013 වර්ෂයට අදාල විගණන වාර්තාව පිළිබඳ ආයතනයේ අදහස්	23 - 31

பொருளடக்கம்

		பக்கம்
1.	2010 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை	32 - 44
2.	2010 டிசெம்பர் 31ஆந் திகதியில் ஐந்தொகை	45
3.	2010 டிசெம்பர் 31ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செலவினக் கணக்குகள்	46
4.	பொதுக் கணக்குப்பரிசோதகர் அறிக்கை	47 - 54
5.	2013 ம் ஆண்டுக்கான கணக்காய்வு சம்பந்தமான கருத்ததுக்கள்	55 - 65

Contents

		Page No.
1	Annual Report for the year 2010	66 - 79
2	Balance Sheet as at 31st December, 2010	80
3	Income and Expenditure Account for the year Ended 31st December, 2010	81
4	Auditor General's Report	82 - 89
5	Comments of the IHRA on the Auditor Genaral's Report on the Accounts of the IHRA	90 - 95

மனிதவள மேம்பாட்டு நிறுவகம் (IHRA – UoC)
கொழும்புப் பல்கலைக்கழகம்

ஆண்டு அறிக்கை 2010

1. அறிமுகம்

மனித வள மேம்பாட்டு நிறுவகம், 2006 ஆம் ஆண்டு 1 ஆம் இலக்க கட்டளைச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறு, 1979 ஆம் ஆண்டு 11 ஆம் இலக்கக் கட்டளைச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்டிருக்கின்றது. மனித வள மேம்பாட்டு நிறுவகம் பூகோள மற்றும் உள்ளூர் அபிவிருத்திகளுக்கு இணங்க "அறிவுப் பொருளாதாரத்தின்" ஊடாக மேம்பாடடைந்து வருகின்றது.

இந்த நிறுவகம் தாபிக்கப்பட்ட போது கடந்த காலத்தில் "அறிவுத் தொழிலாளர்" என்ற பதம் பயன்படுத்தப்பட்டிராத போதிலும் தொழில்புரியும் "வேலைக் குழுக்களுக்கு" கல்வி புகட்டும் பிரதான குறிக்கோள் ஒன்றாகவேயிருந்தது. எவ்வாறாயினும், தற்கால அறிவுத் தொழிலாளர் வகை முகாமைத்துவ வகைகள் மற்றும் பாரம்பரிய வேலைக் குழுவினர் ஆகிய இரு சாராரையும் உள்ளடக்குவதுடன் தற்போதைய நிறுவகத்தின் குறிக்கோள் எந்த வகையான மனித வள மேம்பாட்டிற்கும் பிரயோகமாகின்றது.

நாட்டினை சரியான அபிவிருத்திப் பாதையில் வழிநடத்துவதிலும் இளம் பட்டதாரி மாணவர்களை மட்டுமன்றி தீர்மானம் மேற்கொள்பவர்கள் உள்ளிட்ட நாட்டின் வேலைக் குழுக்களுக்கும் கூட கல்வி அறிவு அளிப்பதிலும் பல்கலைக்ழகங்ககளும் நிறுவகங்களும் பாரிய பொறுப்பினைக் கொண்டுள்ளன. தற்போதைய வேலைக் குழுக்களும் தீர்மானம் மேற்கொள்பவர்களும் உலகில் துரிதமாக மாற்றமடைந்துவரும் அறிவுடன் நாளதுவாக்கப் படாதவிடத்து நாடு எதிர்பார்க்கப்பட்ட வாறு முன்னேற்றமடைய முடியாது. சர்வதேச பல்கலைக்கழக நிறுவனங்களின் செந்தரங்களுக்கு ஏற்ப "அறிவுத் தொழிலாளர்" களுக்கு கல்வி புகட்டி நாட்டிற்குச் சேவை செய்வதே தொழிலாளர் கல்வி நிறுவகத்தின் அடிப்படை எண்ணக்கருவாக இருந்ததுடன் தற்போதைய மனித வள மேம்பாட்டு நிறுவகத்தினதும் எண்ணக்கருவாக உள்ளது.

02. நோக்கக் கூற்று

நோக்கு

மனித வள மேம்பாட்டு நிறுவகம் (IHRA),"அறிவுத் தொழிலாளர்களை" உருவாக்கிக் கொண்டிருந்த தொழிலாளர் கல்வி நிறுவகத்தில் (IWE) இருந்து கூர்ப்படைந்து,

"எங்கள் தேசிய அபிவிருத்தியின் மனித அத்திவாரத்தை வலுவூட்டும் முதிர்ந்த, விவேகமுள்ள பூகோள நிலைமைகளின் சவால்களுக்கு முகம் கொடுக்கும் ஆற்றல் படைத்த மனித வளத்தினை மேம்படுத்துவதற்கு முழுவதுமாக அர்பணிக்கப்பட்ட சால்புமிகு நிறுவகமாக முயல்வதாகும்"

03. பணிக் கூற்று

பணி

தொழில் புரிவோர், தொழில் வழங்குனர்கள், தொழில் முனைவோர் ஆகியோரைக் கொண்டுள்ள சகல "உழைப்பும் கற்றலும்" வேலை-குழுக்களின் ஆற்றல்களை மேம்படுத்தும் மொத்தத் தர முகாமைத்துவ முறைவழியாக்கலூடான விரிவான உயர் - மட்டக் கல்வியை பெற்றுக் கொடுப்பதற்கு வசதியளித்தல்.

நெறிமுறை செந்தரங்கள், தொழில் முனைவுத் திறன்கள், தலைமைத்துவப் பண்புகள், மற்றும் தமது பொறுப்புகளையும் உரிமைகளையும் புரிந்து கொள்ளல் என்பன ஒன்றிலொன்று சார்ந்துள்ள திறன்கள் உட்பட அவர்களின் பகுப்பாய்வு மற்றும் நுண்ணாய்வுச் சிந்தனைத் திறன்களை மேம்படுத்த மேலும் வசதியளித்தல்.

நாட்டின் "அறிவுப்- பொருளாதாரத்திற்கு" முறையானதொரு பங்களிப்புச் செய்யும் மேம்பட்ட மனித வள உருப்பொருள் தொகுதியாக "அறிவுத் தொழில்" குழுக்களை உருவாக்க முயலுதல்.

04. பணிப்பாளரின் மீளாய்வு

2010 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கையைச் சமர்ப்பிப்பதில் நான் பெரும் மகிழ்ச்சியடைகின்றேன். நாட்டின் நிர்வாக, வர்த்தகத் தலைநகரான கொழும்பு மாநகரின் மையத்தில் அமைவுறப்பெற்றிருக்கும் உயர் கல்வி நிறுவனமான கொழும்புப் பல்கலைக்கழக மனிதவள மேம்பாட்டு நிறுவகம் தற்போது (2010 இல்), அண்ணளவாக 591 இளமாணிப் பட்டதாரி மாணவர்களை 04 தொகுதிகளாக நிறுவகத்தில் பட்ட நிகழ்ச்சிக்குப் பதிவுசெய்திருப்பதுடன் இந்த 03 வருட பட்ட நிகழ்ச்சி அரசாங்கத்தினால் நிதியிடப்படுகின்றது.

முனிதவள மேம்பாட்டு நிறுவகம் 2010 ஆம் ஆண்டில் 41 மாணவர்களை பூகோளத் தகவலியல் பட்டப்பின் டிப்புளோமா கற்கைநெறிக்கு, நாட்டின் தொழில்நெறிசார் அறிவுத்-தொழிலாளர்களை மேம்படுத்தும் பொருட்டு, பதிவுசெய்துள்ளது. நிறுவகம் அரசாங்க மானியத்திற்கு மேலதிகமாக கட்டணம் அறவிடும் கற்கைநெறிகளிலிருந்து சுமார் 41 மில்லியன் ரூபாய் வருமானம் ஈட்டியுள்ளது.

தற்போது, மனிதவள மேம்பாட்டு நிறுவகத்தினால் நடாத்தப்பட்டுவரும் கற்கைநெறிகளுக்களுக்கான அதிகரித்துவரும் கேள்வியைச் சமாளிப்பதற்கு தற்போதிருக்கும் வசதிகளை விரிவாக்க கிடைக்கக்கூடிய நிலவளம் போதுமானதாக இல்லை. நிறுவகத்திற்கான இடவசதியினை அதிகரிப்பதற்கு புதிய கட்டடம் ஒன்றின் தேவை பெரிதும் உணரப்படுகின்றது.

05. 2010 ஆம் ஆண்டில் நிறுவகத்தின் அடைவுகளினதும் மேம்பாடுகளினதும் சுருக்கம்

5.1 நாட்டின் தொழில்புரியும் மனிதவளத்திற்கான பெறுமதி சேர்ப்பு

198 தொழில்புரியும் தொழிலாளர் கல்வி இளமாணிப் பட்டதாரிகள், 45 தொழில்புரியும் மனிதவள மேம்பாட்டு பட்டப்பின் டிப்புளோமாதாரிகள், 22 தொழில்புரியும் போதைவஸ்த்து துஷ்பிரயோக முகாமைத்துவ டிப்புளோமாதாரிகள், 13 தொழில்புரியும் சர்வதேச வர்த்தக டிப்புளோமாதாரிகள், 57 சுகாதார மேம்பாட்டு டிப்புளோமாதாரிகள், 20 DRIST சான்றிதழ்தாரிகள், 50 CCCA சான்றிதழ்தாரிகள், சுமார் 3000 ஆங்கில சான்றிதழ்தாரிகள் மற்றும் தமிழ் மொழி சான்றிதழ்தாரிகள் 816 ஆகியோரின் உருவாக்கம்.

5.2 தொழிலாளர் கல்வியில் இளமாணிப் பட்ட பட்டதாரி நிகழ்ச்சி

பீஎல்ஈ பட்ட நிகழ்ச்சி மற்றும் டிப்புளோமாவிற்கு நுளைவதற்கான போட்டி அதிகரித்துள்ளது. மேற்படி நிகழ்ச்சிக்கான தெரிவுத் தேர்வு 10 செப்டம்பர், 2010 அன்று நடாத்தப்பட்டது, பதிவு செய்யப்பட்ட மொத்த மாணவர்களின் எண்ணிக்கை 255 ஆகவிருந்தது.

5.3 நிறுவகத்தினால் பூகோளத் தகவலியலில் பட்டப்பின் டிப்புளோமா நிகழ்ச்சியின் இரண்டாவது தொகுதி தொடங்கப்பட்டமை

நிகழ்ச்சிக்கு 41 பரீட்சார்த்திகள் தெரிவுசெய்யப்பட்டதுடன் கற்கைநெறி 2010 ஆகஸ்டில் தொடங்கப்பட்டது.

5.4 சுகாதார மேம்பாட்டில் டிப்புளோமா இல. 03 ஆரம்பம்

இந்த ஒரு வருட டிப்புளோமா கற்கைநெறிக்காக முப்பத்தைந்து (35) தொழில்புரியும் மாணவர்கள் தெரிவுசெய்யப்பட்டதுடன் கற்கைநெறி நவம்பர் 2010 இல் தொடங்கப்பட்டது.

5.5 சர்வதேச வர்த்தகத்தில் டிப்புளோமா இல. 03 மே 2010 இல் ஆரம்பம்

இந்த ஒரு வருட டிப்புளோமா கற்கைநெறியை இருபத்தெட்டு (28) மாணவர்கள் தொடர்கின்றனர்.

5.6 ஆங்கில மொழி நிகழ்ச்சியில் சான்றிதழ் கற்கைநெறி இல. 30 ஆரம்பம்

நிகழ்ச்சிக்கு 3865 மாணவர்கள் பதிவு செய்யப்பட்டு கற்கைநெறி மார்ச்சு 2010 இல் தொடங்கப்பட்டது.

5.7 தமிழ் மொழி நிகழ்ச்சியில் சான்றிதழ் கற்கைநெறி இல. 05 ஆரம்பம்

நிகழ்ச்சிக்கு 1134 மாணவர்கள் பதிவு செய்யப்பட்டு கற்கைநெறி பெப்பிரவரி 2010 இல் தொடங்கப்பட்டது.

5.8 மதுவரித் திணைக்கள அலுவலர்களுக்காக தமிழ் மொழி செயலமர்வுகள் (கட்டணம் அறவிடும் பாடநெறிகள்) தொடக்கம்

5.9 மனிதவள மேம்பாட்டு நிறுவகத்தில் புதிய கட்டுமாணங்கள்

பிரதான கட்டடத்தின் புனருத்தாபனம்
மமேநி இன் பிரதான கட்டட அஸ்பெஸ்டோ கூரைக்குப் பூச்சிடல்
கணனி ஆய்வுகூட மேம்பாடுகள்
தரைத் தளத்தில் அலுவலகப் பிரதேச விரிவாக்கம்
மமேநி இன் கட்டட தரையோடிடலும் நிறப் பூச்சிடலும்
முதல் தளத்தின் மீது தற்போதிருக்கும் அஸ்பெஸ்டோ கூரையை நீக்கி அச்சில் வார்க்கப்பட்ட கொங்கிறீட் கூரையிடல்

06. முகாமைத்துவம்

நிறுவகத்தின் முகாமைத்துவம் "தொழிலாளர் கல்வி நிறுவக" 2006 ஆம் ஆண்டு கட்டளைச்சட்டம் (திருத்தம்) இல. 01 ஆல் ஆளப்படுகின்றது. மனித வள மேம்பாட்டு நிறுவகம் கொழும்புப் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டு, நிறுவகத்தின் கல்விசார் குழுவின் பரிந்துரையின் பேரில் துணைவேந்தரால் நியமிக்கப்பட்ட முழு நேரப் பணிப்பாளரைக் கொண்டிருக்கின்றது. பணிப்பாளர் நிறுவகத்தின் கல்விசார் மற்றும் நிர்வாகத் தலைவராக உள்ளதுடன் பொறுப்புக்கூறும் அதிகாரியாகவும் உள்ளார். கல்விசார் குழு நிறுவகத்தின் கல்விசார் அதிகார சபையாக உள்ளதுடன், கட்டளைச்சட்டத்திற்கு இணங்க நியமிக்கப்பட்ட ஏனைய உறுப்பினர்களுக்கு மேலதிகமாக, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்ட எட்டு உறுப்பினர்களையும் கொண்டுள்ளது. நிறுவகம் கல்விசார் குழு, பல்கலைக்கழகம், மற்றும் ஆணைக்குழுவின் அங்கீகாரத்துடன் தாபிக்கப்பட்ட பல கற்கைச் சபைகளைக் கொண்டுள்ளது.

நிறுவகத்திற்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் ஊடாக வருடாந்த நிதி மானியம் வழங்கப்படுவதுடன், நிறுவகம் சகல நிதி மற்றும் நிர்வாக விடயங்களையும் அதன் கட்டளைச்சட்டத்திற்கு இணங்க கையாள்கின்றது. கட்டளைச்சட்டத்திற்கு இணங்க பணிப்பாளர் நிர்வாக நிதி அதிகாரியாக உள்ளதுடன், சகல கல்விசார் பொறுப்புக்களும் மனித வள மேம்பாட்டு நிறுவகத்தின் கல்விசார் குழு, மற்றும் கொழும்புப் பல்கலைக்கழக மூதவை மற்றும் பேரவையிடம்

உள்ளன. கூட்டு நிறுவன ஆட்சி நடைமுறைகள் மற்றும் கூட்டு நிறுவனப் பண்பாடு என்பன படிப்படியாக அறிமுகப்படுத்தப்படுகின்றன.

6.1 கல்விசார் குழுவும் கற்கைச் சபைகளும்

6.1.1 கல்விசார் குழு (பெப்பிரவரி 2010 இலிருந்து)

மீளாய்வுக்குரிய ஆண்டில் பதினொரு (11) மாதாந்தக் கூட்டங்கள் நடாத்தப்பட்டன. கல்விசார் குழுவின் உறுப்பினர்கள் வருமாறு.

தலைவர் - பணிப்பாளர்/ மமேறி		கலா. டபிள்யூ. கே. ஹிரிம்புரேகம (டிசெம்பர் 2005 இலிருந்து)
பதவிவழி உறுப்பினர்கள்		
பீடாதிபதிகள்	கலைப் பீடம்	பேரா. இந்திரலால் டீ சில்வா
	கல்விப் பீடம்	பேரா. எஸ். சந்திரசேகரம்
	விஞ்ஞான பீடம்	பேரா. ரீ. ஆர். ஆரியரட்ண
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்டவர்கள்		
திரு. ஏ. பீ. குணரட்ண		முந்நாள் அதிபர் - ஆனந்தா கல்லூரி, கொழும்பு 10
திரு. எஸ். விதானபத்திரண		சிரேஷ்ட உதவிச் செயலாளர்/ உயர் கல்வி அமைச்சு
திரு. பிரேமச்சந்திர அபா		சட்ட உத்தியோகத்தர்
திரு. ஆர். மசகோரால்ல		பொதுச் செயலாளர்/ ஆசிய கப்பற் பேரவை
திரு. ஆர். ஏ. யூ. ரணவீர		கணக்காளர்/ பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு
திரு. டீ. ஆர். உடுவவெல		பதில் பணிப்பாளர்/ தேசிய பாதீட்டு திணைக்களம், பொதுத் திறைசேரி
திரு. கே. கமகே		நிறைவேற்றுப் பணிப்பாளர், தேசிய அபாயகரமான மருந்துப்பொருட்கள் கட்டுப்பாட்டுச் சபை
திரு. மஹிந்த மதியஹெவா		செயலாளர்/ தொழில் மற்றும் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு
திரு. எம். ஜீ. ஜீ. ஹெமகுமார		மனிதவள கல்வி கற்கைச் சபை
திரு. ஆர்.எம். ஆர்.பீ. ராஜபக்ஷ		
திரு. டபிள்யூ. என். வில்சன்		விரிவாக்க நிகழ்ச்சி கற்கை சபை
கலா. டபிள்யூ. எம். கே. விஜேதுங்க		
திரு. கலா. பீ. எம். கிரிபண்டா		மொழிகள் கற்பித்தல் நிகழ்ச்சி கற்கை சபை
திருமதி. பீ. கே. பி. அபேசூரிய		

6.1.2 கற்கைச் சபைகள்

மீளாய்வுக்குரிய ஆண்டில் மூன்று கற்கைச் சபைகளும் நடாத்திய கூட்ட விபரங்கள் (வழமையாக ஒவ்வொரு மாதமும்) வருமாறு:

அ) மனித வள கல்வி கற்கைச் சபை - 12 கூட்டங்கள்
ஆ) மொழிகள் போதனை நிகழ்ச்சி கற்கைச் சபை - 10 கூட்டங்கள்
இ) விரிவாக்க நிகழ்ச்சிகள் கற்கைச் சபை - 06 கூட்டங்கள்

6.2 கல்விசார் ஊழியர்கள், நிர்வாக மற்றும் நிர்வாகம் சாரா ஊழியர்கள்

2010 ஆம் ஆண்டளவில் அளவில், கல்விசார் மற்றும் கல்விசாரா ஊழியர்கள் முப்பத்தாறு (36) பேர் இருந்தனர். அவர்களுள் நால்வர் (04) கல்விசார் ஊழியர்கள் மற்றும் முப்பத்தொருவர் (31) கல்விசாரா ஊழியர்கள். அதற்கு மேலதிகமாக, ஒரு (01) கல்விசார் இணைப்பாளரும் ஒரு (01) கணனித் தொழில்நுட்பவியற் போதனாசிரியரும் நான்கு (04) பாடநெறி இணைப்பாளர்களும் ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட்டுள்ளனர்.

6.2.1 கல்விசார் ஊழியர்கள்

பெயர்	விடயம்	மொழி மூலம்	கலாநிதி	சிரேஷ்ட விரிவுரையாளர்	தகுதிகாண் நிலை	போதனாசிரியர்கள்
கலா. டபிள்யூ.கே. ஹிரிம்புரேகம	ஆராய்ச்சி முறைகள்	சிங்களம், ஆங்கிலம்	✓			
திரு. எம்.ஜீ.ஜீ. ஹெமகுமார	முகாமைத்துவம்			✓		
திருமதி. கே.பி. மாதொட்டாராச்சி	பொருளியல்				✓	
திரு. கே.டி.என். ஹெவகே	புள்ளிவிபரவியலும் கணிதமும்				✓	
திரு. பி.பீ.பி.டி. டி சில்வா	கணனி தொழில்நுட்பவியல்					✓*
மொத்தம்			01	01	02	01

*ஒப்பந்த அடிப்படை

6.2.2 நிர்வாக மற்றும் கல்விசாரா ஊழியர்கள்

கிளை	அதி சிரேஷ்ட	சிரேஷ்ட ஊழியர்	கனிஷ்ட ஊழியர்	சிற்றூழியர்	மொத்தம்
நிர்வாகம்	01	02	06	06	15
நிதி	01	03	02	01	07
பரீட்சைகள்	01	01	02	01	05
நூலகம்	01	-	01	02	04
மொத்தம்	04	06	12	10	31

07. கற்கை நிகழ்ச்சிகளும் மாணவர் எண்ணிக்கையும்

மனித வள மேம்பாட்டு நிறுவகம் தொழில்புரியும் மாணவர்களை ‘‘அறிவுத் தொழிலாளர்களாக’’ மேம்படுத்துவதற்காக 4 பிரதான பரப்புகளில் கொழும்புப் பல்கலைக்கழகத்தின் நிகழ்ச்சிகளை வழங்குகின்றது.

அந்த வித்தியாசமான பரப்புகளாவன:

அ) இளமாணிப் பட்டப் கற்கைநெறி (பீ.எல்.ஈ. பட்டம்)

ஆ) பட்டமுன் டிப்ளோமா நிகழ்ச்சி (பீ.எல்.ஈ. டிப்ளோமா நிகழ்ச்சியும் ஒரு வருட சுயநிதியிடப்பட்ட டிப்ளோமாவும்)

இ) பட்டப்பின் நிகழ்ச்சிகள் (தோற்றுவிக்கப்பட்ட நிதி)

ஈ) சான்றிதழ் கற்கைநெறிகள் மற்றும் குறுங்கால செயலமர்வுகளும் ஏனைய நிகழ்ச்சிகளும் (தோற்றுவிக்கப்பட்ட நிதி)

7.1 அடிப்படைப் பட்டப் கற்கைநெறி– தொழிலாளர் கல்வியில் இளமாணிப் பட்டம் (**BLE)**

இந்த நிகழ்ச்சி இரு கூறுகளைக் கொண்டிருப்பதுடன் அது உள்வாரியான ஒரு இளமாணிப் பட்ட கற்கை நிகழ்ச்சியாகும். தொழிலாளர் கல்வியில் இளமாணிப் பட்டம் BLE (பீ.எல்.ஈ.) கொழுப்புப் பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படும் மூன்று வருடப் பட்ட நிகழ்ச்சியாகும். இளமாணிப்பட்ட முதலாம் வருடத்திற்கு நுளைவதற்குத் தகுதி பெறாதவர்கள், டிப்ளோமா வருட நெறியினையும் தொடர்பான பரீட்சைகளையும் பூர்த்தி செய்ய வேண்டும். 2009 இல் இறுதிப் பரீட்சையை முடித்திருந்த நூற்று நாற்பத்து ஐந்து (145) தொழில் புரியும் பட்டதாரிகள் நிறுவகத்தின் BLE பட்டத்தை பெறத் தகுதி பெற்றிருந்ததுடன் அவர்களுக்கான பட்டமளிப்பு விழா 2010 ஆம் ஆண்டு மே மாதத்தில் நடைபெறும்.

2010 ஆம் ஆண்டில் இந்தக் கல்விசார் நிகழ்ச்சியின் வெவ்வேறு மட்டங்களில் பதிவுசெய்யப்பட்டிருந்த மொத்த மாணவர் எண்ணிக்கை 591 ஆகவிருந்ததுடன் அந்த விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

நிகழ்ச்சி	கற்கைநெறி	மொழி மூலம்	2010 உள்ளேடு	1ஆம் வருட	2ஆம் வருட	3ஆம் வருட	மொத்தம்
பட்ட நிகழ்ச்சி	தொழிலாளர் கல்வியில் டிப்புளோமா	சிங்களம்	54				54
	தொழிலாளர் கல்வியில் இளமாணி	சிங்களம்	201	255	153	130	537

தெரிவுப் பரீட்சையில் நன்றாக செயற்பட்ட புதிய மாணவர்களை 2010 ஆம் கல்வியாண்டிற்கு டிப்புளோமா மட்டம் மற்றும் தொழிலாளர் கல்வியில் இளமாணிப் பட்டம் பகுதி I, இற்குத் தெரிவதற்க்கான நேர்முகத் தேர்வு 10 செப்டம்பர் 2010 அன்று நடாத்தப்பட்டது. அதற்கிணங்க, 54 மாணவர்கள் மற்றும் 201 மாணவர்கள் டிப்புளோமா மட்டத்திற்கு நேரடியாகவும் மற்றும் பட்ட நிகழ்ச்சி பகுதி I இற்கும் முறையே தெரிவு செய்யப்பட்டிருந்தனர். இதற்கு மேலதிகமாக 53 மாணவர்கள் பீ.எல்.ஈ. பகுதி I இற்கு டிப்புளோமா மட்டத்திலிருந்து தெரிவு செய்யப்பட்டிருந்தனர். BLE பகுதி I ற்கான மொத்த மாணவர் எண்ணிக்கை 254 ஆகவிருந்தது.

டிப்ளோமா மட்டம், தொழிலாளர் கல்வியில் இளமாணி பகுதி I, II, மற்றும் III மட்டங்கள் ஆகியவற்றின் வருடாந்தப் பரீட்சைகள் திட்டமிட்டவாறு 2010 இல் நடாத்தப்பட்டதுடன் பெறுபேறுகளும் வெளியிடப்பட்டன.

7.2 பட்டப்பின் டிப்புளோமா கற்கைநெறி

பூகோளத் தகவலியல் முறைமையில் (GIS) பட்டப்பின் டிப்புளோமா இரண்டாம் தொகுதி ஆகஸ்டு 2010 இல் ஆரம்பமாகியது. இந்த நிகழ்ச்சிக்கு 41 மாணவர்கள் தெரிவுசெய்யப்பட்டிருந்தனர்.

7.3 டிப்புளோமா கற்கைநெறிகள்

2010 ஆம் ஆண்டளவில், நாட்டின் தேவை கருதி நிறுவகம் பின்வரும் டிப்புளோமா கற்கைநெறிகளை நடாத்தி வருகின்றது. மாணவர்கள் கற்கைநெறிக் கட்டணங்களைச் செலுத்துகின்றனர்.

ஒரு வருட டிப்புளோமாக்கள்:

அ) போதைப் பொருள் துஷ்பிரயோக முகாமைத்துவக் கற்கைகளில் டிப்புளோமா
ஆ) சுகாதார மேம்பாட்டில் டிப்புளோமா
இ) சர்வதேச வர்த்தகத்தில் டிப்புளோமா

கற்கைநெறி	பதிவுசெய்தோர் எண்ணிக்கை
போதைப் பொருள் துஷ்பிரயோக முகாமைத்துவக் கற்கைகளில் டிப்புளோமா	55
சுகாதார மேம்பாட்டில் டிப்புளோமா	35
சர்வதேச வர்த்தகத்தில் டிப்புளோமா	28

7.4 சான்றிதழ் கற்கைநெறிகள்

7.4.1 ஆங்கில மொழி நிகழ்ச்சிகள்

கற்கைநெறி இல. 30, 2010 இல் பூர்த்தியாக்கப்பட்டது. இறுதிப் பரீட்சைகள், 2010, ஒக்டோபர் 03 ஆம், 10 ஆம் மற்றும் 17 ஆம் திகதிகளில் முறையே உயர், இடைநிலை மற்றும் ஆரம்ப மட்டங்களுக்காக நடாத்தப்பட்டது. மாணவர்கள் 19-09-2010 இல் நடைபெற்ற இல. 31 ஆங்கில மொழி சான்றிதழ் கற்கைநெறி தகுதிநிலைப் பரீட்சையில் அவர்களது ஆங்கிலத் திறனுக்கு இணங்க மூன்று மட்டங்களாகத் தரப்படுத்தப்பட்டனர். இந்தப் கற்கைநெறி தொடர்பான தகவல்களைப் பின்வரும் அட்டவணைகள் காட்டுகின்றன.

அலகு	கற்கைநெறி	மொத்த மாணவர்கள்	மொத்த கல்விசார் ஊழியர்	மொத்த கல்விசாரா ஊழியர்
ஆங்கில அலகு	ஆங்கில மொழியில் சான்றிதழ் - இல. 30	3865	78*	03
	ஆசிரியர்களுக்கான ஆங்கிலத்தில் சான்றிதழ் கற்கைநெறி - இல. 08	264	05*	03

*வருகைதரும் போதனாசிரியர்கள்

ஆங்கில கற்கைநெறி இல. 30 மாணவர்களுக்காக 2010 இல. பூர்த்தியாக்கப்பட்டது. அதன் விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

நிகழ்ச்சி	மொழி மூலம்	உள்ளெடுப்பு 2010	ஆரம்பநிலை		இடைநிலை		உயர்நிலை		சித்தியடைந்தோர் எண்ணிக்கை மொத்தம்
			பதிவு செய்யப்பட்டோர்	சித்தியடைந்தோர்	பதிவு செய்யப்பட்டோர்	சித்தியடைந்தோர்	பதிவு செய்யப்பட்டோர்	சித்தியடைந்தோர்	
ஆங்கில மொழியில் சான்றிதழ் - இல. 30	ஆங்கிலம்	3865	1398	1051	1685	1212	782	534	2797
ஆசிரியர்களுக்கான ஆங்கிலத்தில் சான்றிதழ் கற்கைநெறி - இல. 08	ஆங்கிலம்	264	58	37	118	83	88	60	180

ஆங்கில வகுப்புக்கள் கலைப் பீட நிலமனையிடங்களில் மண்டபச் சிப்பந்திகளுக்கும் வகுப்பறைகளுக்கும் நியாயமான கொடுப்பனவு செய்யப்பட்டு நடாத்தப்படுகின்றன. சகல ஆசிரியர்களும் வருகை தரும் விரிவுரையாளர்களாக நியமிக்கப்பட்டிருந்ததுடன் கலா. பீ.எம். கிரிபண்டா மனித வள மேம்பாட்டு நிறுவகத்தின் இணைப்பாளராக செயற்பட்டார்.

7.4.2 தமிழ் மொழி நிகழ்ச்சிகள்

இளம் பாடசாலை விட்டு விலகியோருக்காகவும் அரசாங்கப் பணியாளர்களுக்குமாக அரசகரும மொழிகள் திணைக்களத்தின் கூட்டுழைப்புடன் 2007 இல் புதிய நிகழ்ச்சி தொடங்கப்பட்டது. இது அரசகரும மொழிகள் திணைக்களத்தினால் பொதுப் பாட விதானத்திற்கு இணங்க சிங்களம் பேசுபவர்களுக்காக நடாத்தப்படும் தேசிய பரீட்சைகளுக்காக மாணவர்களைத் தயார்ப்படுத்தும் நோக்குடன் வடிவமைக்கப்பட்டது. அடிப்படை மட்டம் பேச்சுக் கூறுக்கானது இது தேசிய பரீட்சையில் மட்டம் 3 ஆகவிருக்கும். குறைந்த கற்கைநெறிக் கட்டணமும் உச்ச தராதரங்களைப் பேணலும் தேசிய சேவையில் முக்கியமானவைகளாக உள்ளன. கிராமியப் பிரதேசங்களைச் சேர்ந்த மாணவர்களும் கற்கைநெறிகளுக்கான அணுகலைக் கொண்டிருந்தனர்.

தமிழ் மொழியில் அடிப்படைக் கற்கைநெறி இல. 05, பிரதான கற்கைநெறி 2009 இல் முடிவடைந்திருந்தது. இறுதிப் பரீட்சைகள் 2010, நவம்பரில் நடைபெற்றது. இந்தப் கற்கைநெறி தொடர்பான பொருத்தமான தகவல்களை பின்வரும் அட்டவணைகள் காட்டுகின்றன.

அலகு	கற்கைநெறி	மொத்த மாணவர்கள்	மொத்த கல்விசார் ஊழியர்	மொத்த கல்விசாரா ஊழியர்கள்
தமிழ் அலகு	தமிழில் சான்றிதழ் கற்கைநெறி - இல. 05	1100	20*	01
	தமிழில் சான்றிதழ் கற்கைநெறி - இல. 05-A	34	01*	01
	தமிழ் மொழி செயலமர்வு - இல. 05-01	30	04*	01

*வருகைதரும் போதனாசிரியர்கள்

தமிழ் கற்கைநெறி இல. 05 மற்றும் செயலமர்வு இல. 05-01 என்பன மாணவர்களுக்காக 2010 இல் பூர்த்தியாக்கப்பட்டன. அதன் விபரங்கள் கீழே தரப்பட்டிருக்கின்றது.

நிகழ்ச்சி	மொழி மூலம்	உள்ளெடுப்பு 2010	ஆரம்பநிலை	இடைநிலை	உயர்நிலை	மொத்த சித்தியடைந்தோர் எண்ணிக்கை
தமிழில் சான்றிதழ் கற்கைநெறி - இல. 05	தமிழ்	1100	956	109	35	786
தமிழ் மொழி செயலமர்வு - இல. 05-01	தமிழ்	30	30	-	-	29

7.4.2 வர்த்தகத்தில் கணனிப் பிரயோகங்களில் சான்றிதழ் கற்கைநெறி (**CCCAB**)

வர்த்தகத்தில் கணனிப் பிரயோகங்கள் சான்றிதழ் கற்கைநெறியின் (CCCAB) மூன்றாவது தொகுதி கற்கைநெறி 2 குழுக்களாக 2010 ஜுலையிலும் ஒக்டோபரிலும் பூர்த்தியாக்கப்பட்டன. CCCAB கற்கைநெறி இல. 03 மாணவர்களுக்காக 2010 பூர்த்தியாக்கப்பட்டது. அதன் விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

நிகழ்ச்சி	மொழி மூலம்	உள்ளெடுப்பு 2010	மொத்த சித்தியடைந்தோர் எண்ணிக்கை
சான்றிதழ் கற்கைநெறி CCCAB - இல. 03	தமிழ்	83	50

வர்த்தகத்தில் கணனிப் பிரயோகங்கள் சான்றிதழ் கற்கைநெறியின் நான்காவது தொகுதி 05 செப்டம்பர், 2010 பூர்த்தியாக்கப்பட்டது. கற்கைநெறிக்கு 46 மாணவர்கள் பதிவுசெய்யப்பட்டிருந்தனர்

08. ஆராய்ச்சி, புதுமையான கண்டுபிடிப்புகள் மற்றும் வெளியீடுகள் பற்றிய விபரம்

இலங்கையின் கிராமிய சந்தைகளில் தொலைக்காட்சி விளம்பரங்களின் விளைதிறன் (29 நவம்பர் 2010 அன்று மஹாத்மா காந்தி பல்கலைக்கழகத்தில் ஆய்வுக்கட்டுரை சமர்ப்பிக்கப்பட்டது).

விடயம்	பிரசுரிக்கப்பட்டது	வர்த்தமயப்படுத்தப்பட்டது	சமர்ப்பிக்கப்பட்டது
அ. ஆராய்ச்சிகளின் எண்ணிக்கை		01	

09. நிகழ்ச்சிகள், கருத்தரங்குகள் மற்றும் செயலமர்வுகள் பற்றிய விபரம்

பூகோளத் தகவலியலில் பட்டப்பின் டிப்புளோமா கற்கைநெறி இல. 01 மாணவர்களுக்கான குருணாகல, ஹக்வத்துன்ன ஓயா சாத்தியகூற்ற ஆய்வுகள். இந்த செயலமர்வு ஆகஸ்டு 19 ஆம் மற்றும் ஆகஸ்டு 21 ஆம் திகதிகளில் நடாத்தப்பட்டது.

விடயம்	பங்குபற்றியது	பூர்த்தியாக்கப்பட்டது	சமர்ப்பிக்கப்பட்டது
அ. பட்டப்பின் டிப்புளோமா நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை		01	

10. நூலகம்

மனிதவள மேம்பாட்டு நிறுவகம் நூலகச் சேவைகள் வழங்குவதனை 1975 ஆம் ஆண்டில் ஆரம்பித்தது. மனிதவள மேம்பாட்டு நிறுவக நூலகம் சுமார் 23,000 நூல்களுடன் 06 ஊழியர்களுடனும் 2002 ஆம் ஆண்டிலிருந்து கல்விப் பீடத்தின் தற்காலிக கட்டடமொன்றில் அமைந்திருக்கின்றது. தொழிலாளர் கல்விக்குப் பொருத்தமான அரிய சேகரிப்புக்களுடனான இந்தப் பெறுமதியான வளம் பல்கலைக்கழக சமூகத்தின் உச்சப் பயன்பாட்டிற்கு அவசரமாக மீள ஒழுங்கமைக்கப்பட வேண்டியுள்ளது.

2010 ஆம் ஆண்டில், ஒரு கல்விசார் ஊழியர் குழாம் உறுப்பினர், ஒரு கனிஷ்ட ஊழியர் குழாம் உறுப்பினர் மற்றும் இரு சிற்றூழியர்கள் உட்பட 04 உறுப்பினர்கள் நிரந்தர ஊழியர் குழாத்தில் இருந்தனர். அதற்கு மேலதிகமாக, இரு கருத்திட்ட உதவியாளர்கள் மற்றும் ஒரு கணனிப் பிரயோக உதவியாளர் உட்பட 03 உறுப்பினர்கள் ஒப்பந்த அடிப்படையில் இருந்தனர்.

கிளை	அதி சிரேஷ்ட	சிரேஷ்ட ஊழியர்	கனிஷ்ட ஊழியர்	சிற்றூழியர்	மொத்தம்
நூலகம்	01	-	04*	02	04

*தற்காலிக ஊழியர்கள் உட்பட

2010 ஆம் ஆண்டில் நூலகத்தில் மொத்தமாக 654 உறுப்பினர்கள் இருந்தனர். அது 593 மாணவர்களையும் 61 கல்விசார் மற்றும் கல்விசாரா ஊழியர் குழாம் உறுப்பினர்களையும் கொண்டிருந்தது. 2010 ஆம் ஆண்டில் 16904 இரவல் நூல்களும் 5400 உசாத் துணை நூல்களும் இருந்தன. அது 171,435.95 ரூபாய்களைச் செலவிட்டு 317 புதிய நூல்களை நூலகத்திற்கு கொள்வனவு செய்திருந்தது. 2010 இல், 20 நூல்கள் நூலகத்திற்கு நன்கொடையாகக் கிடைக்கப்பெற்றிருந்தன. 2010 ஆம் ஆண்டு காலப்பகுதியில் நிறுவகம் பருவ இதழ்களின் கொள்வனவிற்காக ரூபா 66,705 இனைச் செலவிட்டிருந்தது.

வழங்கல்களின் மொத்த எண்ணிக்கை – 2010

நூல்களின் சுற்றோட்டம்	மாணவர்	ஊழியர்	மொத்தம்
திரும்பல்கள்	2463	457	2920
வழங்கல்கள்	2150	398	2548

நூலகத்தின் வருமானம் - 2010

வருமானம்	ரூபாய்கள்
போட்டோப் பிரதி சேவை	ரூ. 19,783.50
நூலகத் தண்டப் பணம்	ரூ. 10,159.00
தொலைந்த நூல்கள் தொடர்பான அறவீடுகள்	ரூ. 2,121.87
தொலைந்த சிட்டைகள்	ரூ. 350.00
மொத்தம்	ரூ. 32,414.37

11. நிதிச் செயற்பாடுகள்

2010 ஆம் ஆண்டிற்கான மொத்த அரசாங்க மானியம் ரூபா 23 மில்லியன் ஆக இருந்ததுடன் நிறுவகத்தினால் பிறப்பிக்கப்பட்ட வருமானம் ரூபா 41 மில்லியனாக இருந்தது.

2010 ஆம் ஆண்டு இறுதிக் கணக்குகளின் பிரதான விடயங்கள்

வருமானம் **x** ரூ. 1000			செலவினம் **x** ரூ. 1000		
01	அரச மானியம் - மீண்டும் வரும்	19,000	01	வேதனங்கள் - கல்விசார்	4,541
02	அரச மானியம் - மூலதனம்	3,950	02	வேதனங்கள் - கல்வி சாரா	11,489
03	அரச தகவல் தொழில்நுட்ப மானியம்	-	03	வருகை தரும் விரிவுரையாளர்கள்	427
04	விரிவாக்கப் கற்கைநெறிகள் - வருமானம்	40,951	04	ஒப்பந்த சேவைகள்	2,331
05	ஏனைய உழைப்புகள் (மீ. வ. செல. ஆக)	-	05	பராமரிப்புச் செலவினங்கள்	584
06	ஏனைய உழைப்புகள் (மூலதன செல. ஆக)	-	06	கொள்வனவுகள் - மூலதனம்	5,506
			07	விரிவாக்கல் கற்கைநெறிகள் தொடர்பிலான செலவுகள்	35,776
			08	ஏனைய செலவினங்கள் - பட்டமளிப்புகள் முதலியன	3,246
01	மூலதன விடயங்களின் மொத்தத் தேறிய மதிப்பு	24,876	01	சொத்துரிமமும் பொறுப்புகளும்	91,566
	நடைமுறை சொத்துக்கள்	66,689			
	மொத்தம்	155,466		மொத்தம்	155,466
*நிறுவகத்தின் மனித வளத்திற்கும் உற்பத்திக்கும் பணப் பெறுமதி தரப்படவில்லை.					

கலா. டபிள்யூ. கே. ஹிரிம்புரேகம
பணிப்பாளர்

மனிதவள மேம்பாட்டு நிறுவகம்
கொழும்புப் பல்கலைக்கழகம்

2010 திசெம்பர் 31 இல் நிதி நிலைமைக் கூற்று

சொத்துக்கள்	குறிப்பு	2010	2010	2009	2009
சொத்துக்கள்					
நடைமுறையில்லா சொத்துக்கள்					
ஆதனம், பொறித் தொகுதியும் உபகரணங்களும்	1	25,693,707.91		24,108486.95	
முதலீடுகள்	2	51,130,552.18		31,134,255.32	
			76,824,260.09		55,242,742.27
நடைமுறைச் சொத்துக்கள்	4				
பண்டங்கள்/இருப்பு	4A	629,775.04		831,279.01	
வியாபார மற்றும் ஏனைய வருமதிகள்	4B	5,741,891.77		4,615,281.15	
முன் கொடுப்பனவுகள்	4C	-		17,043.98	
காசும் காசுக்குச் சமமானவைகளும்	4D	9,187,068.77		6,244,682.80	
			15,558,735.58		11,708,286.94
மொத்த சொத்துக்கள்			92,382,995.67		66,951,029..21
பொறுப்புக்கள்					
நடைமுறைப் பொறுப்புக்கள்	5				
சென்மதிகள்	5A	8,025,612.61		5,811,068.12	
அட்டுறு செலவினங்கள்	5B	324,933.30		332,181.69	
			8,350,545.91		6,143,249.81
நடைமுறையில்லா பொறுப்புக்கள்	6				
சென்மதிகள்	6A	48,481,489.43		29,952,904.64	
ஒத்தி வைக்கப்பட்ட வருமானம்	6B	20,745,442.15		19,164,429.60	
பணிக்கொடைக்கான ஒதுக்கம்	6C	6,730,825.00		5,923,905.00	
			75,957,756.58		55,041,239.24
மொத்தப் பொறுப்புக்கள்			84,308,302.49		61,184,489.05
			8,074,693.18		5,766,540.17
தேறிய சொத்து/சொத்துரிமம்	7				
செலவிடப்படாத மூலதன மானியம்	7A	1,705,837.65		269,273.56	
திரட்டிய நிதியம்	7B	6,355,993.33		5,488,562.81	
ஒதுக்கங்கள் - நன்கொடைகள்	7C	12,862.20		8,703.80	
மொத்தத் தேறிய சொத்து/ சொத்துரிமம்			8,074,693.18		5,766,540.17

ஒப்பம்
கலா. டபிள்யூ. கே. ஹிரிம்புரேகம
(பணிப்பாளர்)

(மூத்த பதில் நிதியாளர்)

மனிதவள மேம்பாட்டு நிறுவகம்
கொழும்புப் பல்கலைக்கழகம்

2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று

	குறிப்பு	2010	2009
		ரூ.	ரூ.
செயற்பாட்டு வருமானம்			
மீண்டும் வரும் மானியம்		19,000,000.00	16,806,000.00
அரச மானியங்களின் கடன் தீரத்தல் - தேய்மானம்	6B + 7B	4,923,110.96	4,093,672.56
வருமானம் - ஏனைய வருமானம்	8B	40,951,198.29	39,492,011.86
		64,874,309.25	60,391,684.42
செயற்பாட்டு செலவினங்கள்			
ஆளணி வேதனங்கள்	9A	16,456,882.47	15,604,513.75
பிரயாணம்	9B	24,595.00	24,491.00
விநியோகங்களும் நுகர்வுகளும்	9C	1,860,364.80	1,771,873.91
பராமரிப்பு	9D	584,105.94	855,850.84
ஒப்பந்த சேவைகள்	9E	2,331,375.30	1,993,038.84
ஏனைய செயற்பாட்டு செலவினங்கள்	9F	1,209,096.88	1,223,902.97
புணிக்கொடை	9G	806,920.00	490,022.50
தேய்மானம்	9H	4,923,110.96	4,093,672.56
விரிவாக்க நிகழ்ச்சிகள் மீதான செலவினங்கள்	9I	35,775,983.84	29,825,882.84
அகற்றல்களும் பதிவழிப்புகளும்			
மொத்த செயற்பாட்டு செலவினங்கள்		63,972,435.19	55,883,249.21
காலப் பகுதிக்கான தேறிய மிகை/ (பற்றாக்குறை)		901,874.06	4,508,435.21

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය / எனது இல / My No: சிஎ/சி/ஐஎச்ஆர்ஏ/10/எப்/ஏ

ඔබේ අංකය / உமது இல / Your No.:

දිනය / திகதி / Date: 2011 ஆகஸ்ட் 08

பணிப்பாளர்

கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்ட மனித வளங்கள் மேம்பாட்டு நிறுவகம்

கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்ட மனித வளங்கள் மேம்பாட்டு நிறுவகத்தின் 2010 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108(2) ஆம் பிரிவு மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

கொழும்பு பல்கலைக்கழத்துடன் இணைக்கப்பட்ட மனித வளங்கள் மேம்பாட்டு நிறுவகத்தின் 2010 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 18 ஆம் பிரிவின் பிரகாரம் சட்டமாக்கப்பட்ட 1979 இன் 11 ஆம் இலக்க மனிதவளங்கள் மேம்பாட்டு நிறுவக கட்டளைச் சட்டத்தின் 23 ஆம் பிரிவு, பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108(1) மற்றும் 111 ஆம் பிரிவுகள் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3),(4) மற்றும் (7) ஆம் உப பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108(2) ஆம் பிரிவு மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7) (ஏ) பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை வழங்கப்படுகின்றது. எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டு நியாயமாக சமர்ப்பிக்கப்படுவது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருட்படுத்தக்கூடிய தவறான கூற்றுக்களில் இருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரித்து நியாயமாகச் சமர்ப்பிக்கப்படுவதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்கல் மற்றும் செயற்படுத்தல்,

---

ස්වාධීන චතුරශ්‍රය, කොළඹ 07, ශ්‍රී ලංකාව
சுதந்திர சதுக்கம், கொழும்பு 07, இலங்கை
INDEPENDENCE SQUARE, COLOMBO 07, SRI LANKA

දුරකථන / தொலைபேசி 2691151
ෆැක්ස් අංකය / பக்ஸ் இல / Fax No. 2697451
ඊමේල් / ஈ-மெயில் oaggov@sltnet.lk

பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகளைத் தெரிவுசெய்து பிரயோகித்தல் சந்தர்ப்பங்களுக்கு உகந்த வகையில் நியாயமாக கணக்கீட்டு மதிப்பீடுகளைத் தயாரித்தல் என்பன இப் பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

1.3 கணக்காய்வின் நோக்கெல்லை மற்றும் அபிப்பிராயத்திற்கான அடிப்படை

என்னுடைய கணக்காய்வு பரிசோதனையை அடிப்படையாகக் கொண்டு இந் நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இவ்வறிக்கையிலுள்ள கணக்காய்வு அபிப்பிராயம், கருத்துரைகள், மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தினைக் கொண்டு காணப்படுகின்றது. நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்ளத்தக்க வகையில் கணக்காய்வானது இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு அமைய மேற்கொள்ளப்பட்டது. நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினதும், வெளிப்படுத்தல்களினதும் ஆதாரத்திற்கான சான்றுகளின் பரிசோதனை, நிதிக் கூற்றுக்களினைத் தயாரித்தலில் முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டு கொள்கைகள், குறிப்பிடத்தக்க மதிப்பீடுகள் மற்றும் அவற்றின் ஒட்டுமொத்த முன்வைத்தலை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றை கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான போதியளவு அடிப்படை எனது கணக்காய்வின் மூலம் வழங்கப்பட்டுள்ளது என நான் நம்புகிறேன். 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும், பரப்பினையும், நிர்மாணிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

2. நிதிக்கூற்றுக்கள்

2.1. அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து தெளிவாகும் எனக்களிக்கப்பட்ட உயர்ந்தபட்ச தகவல்களுக்கும் விளக்கங்களுக்கும் அமைய, கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்ட மனிதவளங்கள் மேம்பாட்டு நிறுவகம் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கு உரிய கணக்கேடுகளைப் பராமரித்து வந்திருந்தது என்றும், இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் காட்டப்பட்டவாறான விடயங்களால் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களைத் தவிர 2010 திசெம்பர் 31 இல் உள்ளபடி கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்ட மனிதவளங்கள் மேம்பாட்டு நிறுவகத்தின் நிலைவரம், அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் செயற்பாடுகளிலிருந்தான நிதிசார் விளைவு, காசோட்டம் என்பவற்றை உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்கியதாக நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்றும் நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

2.2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

2.2.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2011 மார்ச் 01 ஆந் திகதி கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் காணப்படும் கணக்கீட்டுக் குறைபாடுகளை உள்ளடக்கிய கணக்காய்வு ஐய வினா ஒன்று 2011 ஏப்ரல் 19 ஆந் திகதி பணிப்பாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதுடன் அதற்கிணங்க திருத்திய நிதிக்கூற்றுக்கள் 2011 மே 05 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டன.

2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

2.2.3 இணங்காணப்படாத மீதி

2010 திசெம்பர் 31 ஆந் திகதி வரை தொடர்ச்சியாகக் காணப்பட்டுவரும் 3 முற்பணக் கணக்குகளின் ரூபா 200,166 தொகையான மீதியினை இணங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

2.2.4 அறவிடப்படாது காணப்படும் மீதி

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 03 கணக்குகளின் ரூபா 257,853 கூட்டுமொத்தமான மீதி 02 ஆண்டுகளிலிருந்து 04 ஆண்டுகள் வரையான காலமாக அறவிடாது காணப்பட்டன.

2.2.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு	இணக்கமின்மை
2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபத்தின் 6.5.1 ஆம் பந்தி	நிதிக்கூற்றுக்களுடன் வரைவு ஆண்டறிக்கையின் ஒரு பிரதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.
2004 யூலை 29 ஆந் திகதிய பீஈடீ 25 ஆம் இலக்க சுற்றுநிருபம்	நிறுவனத்தினால் அதனது நிதிகளை முதலீடு செய்யும் போது பொதுத்திறைசேரியின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும் 2009 ஆம் ஆண்டில் முதலீடு செய்த ரூபா 6,000,000 தொகையும் 2010 ஆம் ஆண்டின் போது முதலீடு செய்த ரூபா 9,200,000 தொகையான நிலையான வைப்புக்களும் தொடர்பாக அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

2.2.6 போதிய அதிகாரத்தினால் ஆதாரப்படுத்தப்படாத கொடுக்கல்வாங்கல்கள்

2010 கல்வி ஆண்டில் தொழில்கல்வி பட்டப்படிப்பு கற்கை நெறியின் விண்ணப்பக் கட்டணமாக ஒரு விண்ணப்பதாரியிடமிருந்து ரூபா 500 படி 826 விண்ணப்பதாரர்களிடமிருந்து ரூபா 413,000 தொகை அறவிடப்பட்டிருந்ததுடன் அப்பணத்திலிருந்து 1994 யூன் 14 ஆந் திகதிய 95 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபத்திலுள்ள ஏற்பாடுகளுக்கு முரணாக பரீட்சை மேற்பார்வை, விடைத்தாள் திருத்துதல், விடுமுறைதின படிகள், மேலதிக நேர வேலை ஆகிய செலவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

1994 யூன் 14 ஆந் திகதிய 95 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபத்திற்கு முரணாக 2010 ஆம் ஆண்டிற்கான கல்வி மாணி கற்கைநெறி வருமானத்திலிருந்து ரூபா 167,800 தொகை மாணவர் நலன்புரிக்கான செயற்திட்டத்தில் சேவையாற்றிய உத்தியோகத்தர்களுக்கும் படியாகச் செலுத்தப்பட்டிருந்தது. தொழிற் கல்வி கற்கை நெறிக்கான அந்த உத்தியோகத்தர்களின் தேவைப்பாட்டினை கணக்காய்வின் போது உறுதிப்படுத்த முடியாதிருந்தது.

3. நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக நிறுவனத்தின் செயற்பாடுகளின் நிதிசார் விளைவுகளானது மீண்டுவரும் செலவுகளுக்கான அரசாங்கத்தின் மானியத்திலான கணக்கிற்கு எடுத்துக்கொள்வதற்கு முன்னர் ரூபா 18,098,126 பற்றாக்குறையாக இருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான இதனோடொத்த பற்றாக்குறை ரூபா 12,297,565 ஆக இருந்ததனால் மீளாய்வாண்டிற்கான பற்றாக்குறை ரூபா 5,800,561 ஆல் அதிகரித்திருந்தது. மீண்டுவரும் செலவுக்கான ரூபா 19,000,000 தொகையான அரசாங்கத்தின் மானியத்தின் காரணமாக மீளாய்வாண்டிற்கான பற்றாக்குறை ரூபா 901,874 மிகையாக மாறியிருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கு மீண்டுவரும் செலவுக்கான ரூபா 16,806,000 தொகையான அரசாங்க மானியத்தின் காரணமாக அவ்வாண்டிற்கான பற்றாக்குறை ரூபா 4,508,435 தொகையான மிகையாக மாறியிருந்தது.

(15)

முன்னைய ஆண்டின் பிரகாரம் மீளாய்வாண்டில் ரூபா 3,606,561 தொகையான மிகையில் குறைவுக்கு ரூபா 4,482,625 தொகையான வருமான அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் ரூபா 8,089,186 தொகையான செலவு அதிகரிப்பு விசேடமாக தாக்கமளித்திருந்தது.

3.1.1 சச்சரவுத் தன்மையான கொடுக்கல்வாங்கல்

1994 யூன் 14 ஆந் திகதிய 95 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபத்திற்கு முரணாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட சுற்றுநிருபத்தினை அடிப்படையாகக் கொண்டு இரண்டாவது மற்றும் மூன்றாவது மொழித் தேர்ச்சிக்காக சம்பளமும் படிகளுமாக 2010 ஆம் ஆண்டின் போது ரூபா 78,450 செலுத்தப்பட்டிருந்தது. இந்த படிகள் கொடுப்பனவு அரசாங்கத்தின் சட்ட விதிகளுக்கு முரணானது என பொது முயற்சிகள் பணிப்பாளர் நாயகம் மற்றும் தேசிய வரவு செலவுத்திட்ட பணிப்பாளர் நாயகத்தினால் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்குத் தெரியப்படுத்தியிருந்த போதிலும் அக்கொடுப்பனவு தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றது.

3.2 செயற்பாட்டு மீளாய்வு

3.2.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிறுவனத்தினால் நடாத்தப்பட்டுவருகின்ற பட்டப்படிப்பு கற்கைநெறியாகிய தொழிற்கல்வி பட்டப்படிப்பு கற்கை நெறிக்காக 2010 ஆம் ஆண்டில் பதிவுசெய்து கொண்ட புதிய மாணவர்களின் எண்ணிக்கை 126 ஆக இருந்ததுடன் அது கடந்த ஆண்டினை விட 44 மாணவர்கள் குறைவாகும்.

(ஆ) 2010 ஆம் ஆண்டின் போது பணம் அறவிடும் 18 கற்கை நெறிகள் நடாத்தப்பட்டதுடன் அதற்காக பங்குபற்றிய மாணவர்களின் மொத்த எண்ணிக்கை 9,319 ஆகும். பரீட்சைக்குத் தோற்றாத மாணவர்களின் எண்ணிக்கை 576 ஆக இருந்ததுடன் அது மொத்த மாணவர்கள் எண்ணிக்கையில் 6% ஆக இருந்தது. 06 பரீட்சைகள் நடாத்தப்பட்டு 04

இலிருந்து 10 மாதங்கள் வரையான காலம் கடந்திருந்த போதிலும் பெறுபேறுகள் வெளியிடப்பட்டிருக்கவில்லை.

(இ) பணம் அறவிடும் கற்கை நெறிகளின் கட்டணமாக ரூபா 54,497,829 தொகை 2010 ஆம் ஆண்டின் போது கிடைத்திருந்ததுடன் அதனை கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 14% அதிகரிப்பாகும்.

(ஈ) தொழிற்கல்வி பட்டப்படிப்பு கற்கை நெறிக்காக 2010 ஆம் ஆண்டின் போது ஒதுக்கீடு செய்யப்பட்ட மணித்தியாலங்களின் எண்ணிக்கை 1,107.5 ஆக இருந்ததுடன் அது செமஸ்டர் முறைமையின் பிரகாரம் தீர்மானிக்கப்பட்டது. அதற்கிணங்க ஒதுக்கீடு செய்யப்பட்ட மணித்தியாலங்களின் எண்ணிக்கை கடந்த ஆண்டினை விட விரிவுரை மணித்தியாலங்கள் 417.5 அதிகரித்துள்ளது. அவ்வாறே 2010 ஆம் ஆண்டின் போது நடாத்தப்பட்ட உள்ளபடியான மொத்த மணித்தியாலங்களின் எண்ணிக்கையும் 1,107.5 மணித்தியாலங்களாக இருந்ததுடன் அதனை கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 658.5 மணித்தியாலங்கள் அதிகமாகும். நடாத்தப்பட்ட விரிவுரை மணித்தியாலங்களில் 423 மணித்தியாலங்கள் நிறுவகத்தின் ஐந்து உள்ளக விரிவுரையாளர்களினாலும் 724.5 மணித்தியாலங்கள் 24 பகுதிநேர விரிவுரையாளர்களினாலும் நடாத்தப்பட்டன. இதற்கிணங்க கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் உள்ளக விரிவுரையாளர்களால் நடாத்தப்பட்ட விரிவுரை மணித்தியாலங்கள் 254 ஆல் அதிகரித்தும் பகுதிநேர விரிவுரையாளர்களினால் நடாத்தப்பட்ட விரிவுரை மணித்தியாலங்கள் 444.5 ஆல் அதிகமாகவும் காணப்பட்டது. மொத்த விரிவுரை மணித்தியாலங்களின் எண்ணிக்கையில் உள்ளக விரிவுரையாளர்களினால் நடாத்தப்பட்ட விரிவுரை மணித்தியாலங்களின் எண்ணிக்கை 37% ஆக இருந்தது.

3.2.2 குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

2007 செப்தெம்பர் மற்றும் 2008 பெப்ரவரி மாதங்களின் போது ரூபா 330,155 தொகைக்கு கொள்வனவு செய்யப்பட்ட விரல் அடையாளங்களைப் பதிவுசெய்யும் மூன்று இயந்திரங்கள் திருத்தம் செய்ய முடியாது நிலையில் காணப்பட்டமையினால் 2008 ஆம் ஆண்டிலிருந்து பயன்பாட்டிற்கு எடுத்துகொள்ளப்பட்டிருக்கவில்லை.

(149)

3.2.3 கூட்டிணைந்த திட்டம் மற்றும் செயல் நடவடிக்கைத் திட்டம்

2003 யூன் 02 ஆந் திகதிய பீசடீ 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபத்தின் 5 ஆம் அத்தியாயம் 5.1.3 ஆம் பந்தியின் பிரகாரம் கூட்டிணைந்த திட்டம் வருடாந்தப் தயாரிக்கப்பட்டிருக்க வேண்டிய போதிலும் 2009 ஆம் ஆண்டிலிருந்து கூட்டிணைந்த திட்டமோ அல்லது அவ்வாண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டமோ தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. எனவே நிறுவனத்தினால் ஒவ்வொரு ஆண்டிலும் அடைந்துகொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட குறிக்கோள்களும் இலக்குகளும் என்ன என்பதனையும் அதன் நிதிசார் மற்றும் பௌதீக செயல் முன்னேற்றத்தினையும் பரிசோதனை செய்ய முடியாதிருந்தது.

3.2.4 பாதீடு

பீசடீ 12 ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் பிரகாரம் கூட்டிணைந்த திட்டமும் செயல் நடவடிக்கைத் திட்டமும் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் நிறுவனத்தினால் மேற்கூறிய திட்டங்களின்றி பாதீடு தயாரிக்கப்பட்டிருந்தது.

4. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட அவதானம் தேவைப்படுகின்றது.

(அ) பரீட்சை நடவடிக்கை

(ஆ) நிலையான சொத்துக்களை பதிவேடுகளுக்கு கொண்டுவருதல்.

ஒப்பம் :- எச்.ஏ.எஸ். ஸமரவீர

பதில் கணக்காய்வாளர் தலைமை அதிபதி

Nr/Sd

கொழும்புப் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்ட மனித வளங்கள் மேம்பாட்டு நிறுவகத்தின் 2010 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக் கூற்றுகள் மீது 1978 ஆம் ஆண்டு 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 108(2) ஆம் பிரிவு மற்றும் 1971 ஆம் ஆண்டு 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13 (7) (ஏ) பிரிவின் படி கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

நிதிக் கூற்று தொடர்பிலான தாக்கம்	கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புகள்	கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு ஏற்கனவே முன்வைக்கப்பட்ட கருத்துரைகள்	2013 வரையில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள், தற்போதைய நிலைமையும் முன்னேற்றமும்
2 நிதிக் கூற்று தொடர்பிலான கருத்துரைகள் 2.2 நிதிக் கூற்றுத் தொடர்பிலான கருத்துரைகள் 2.2.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்	01 மார்சு 2011 அன்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களில் காணப்பட்ட கணக்கீட்டு வழுக்களை உள்ளடக்கிய கணக்காய்வு வினா ஒன்று 19 ஏப்பிரல் 2011 அன்று பணிப்பாளருக்கு அனுப்பப்பட்டது. அதற்கிணங்க திருத்தப்பட்ட நிதிக் கூற்றுக்கள் 05 மே 2011 அன்று கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.		
2.2.2. கணக்காய்வு குறைபாடுகள் 2.2.3 இனங் காணப்படாத நிலுவை	31 திசெம்பர் 2010 வரையில் தொடர்ச்சியாக மீதியாக இருந்த ரூ.200,166 தொகை பெறுமதியான 3 முற்பணக் கணக்கு நிலுவைகளை இனங் காண்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை.	முகாமைத்துவச் சபையின் பரிந்துரைகள் பொதுத் திறைசேரிக்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன். கல்விசார் குழு நிலுவைகளைப் பதிவழிப்பு செய்ய வேண்டியுள்ளது. (இணைப்பு 01)	இது சுமார் 11 வருடங்களாக நிலுவையாக இருந்த ஒரு நானாவித கணக்கு. இது தொர்பான ஆவணங்களைத் தற்போது தேடுவது சாத்தியமற்ற காரணத்தினால் இந்த நிலுவைகளைப் பதிவழிப்புச் செய்யும் நோக்குடன் உயர் கல்வி அமைச்சுக்கு அனுப்புவதற்காக இது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

நிதிக் கூற்று தொடர்பிலான தாக்கம்	கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புகள்	கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு ஏற்கனவே முன்வைக்கப்பட்ட கருத்துரைகள்	2013 வரையில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள், தற்போதைய நிலைமையும் முன்னேற்றமும்
2.2.4 அறவிடப் படாதிருந்த நிலுவைகள்	31 திசெம்பர் 2010 அன்று முடிவடைந்த ஆண்டில் 3 கணக்குகளின் நிலுவையாக ரூபா. 257,853 தொகை 2 வருடங்கள் தொடக்கம் 4 வருட காலமாக அறவிடப் படாதிருந்தது.	1. திரு. எம் எஸ் சீ பெரேரா இவர் அனுமதிக்கப்பட்ட சம்பளமற்ற விடுப்பினைப் பெற்ற பின்னர் வெளிநாடு சென்றிருக்கின்றார். அவர் நாடு திரும்பி கடமைகளைப் பொறுப்பேற்ற பின்னர் இந்தக் கடனை அவரது சம்பளத்திலிருந்து கழிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். 2. திருமதி எம் பீ ஜீ டி மெனிகே இந்தக் கடன் குறித்த பல்கலைக் கழகத்தினால் பொறுப்பேற்கப் பட்டுள்ளது. ரசீது இலக்கம் 100198 3. திரு. வி ஐ டி ஜே பெரேரா இவர் தொடர்பில் நீதிமன்றத்தில் வழக்கு ஒன்று பதிவு செய்யப் பட்டிருக்கின்றது. பல்கலைக்கழக சேமலாப நிதி விடுவிக்கப்படும் போது இந்தக் கடனை அறவிட நடவடிக்கை எடுக்கப்படும்.	அறவிடப்படாத நிலுவைகளில் இருந்து திரு. எம் எஸ் சீ பெரேரா மற்றும் திருமதி எம் பீ ஜீ டி மெனிக்கே ஆகியோரின் கடன்கள் ரசீது இலக்கம் 100324 மற்றும் 100198 இன் படி அறவிடப்பட்டிருக்கின்றது. அறிடப்படாத கடன் நிலுவைகளிலிருந்து ரூ. 191,000 தொகையான இடர்க் கடன் ஒன்று திரு. வீ ஐ டி ஜே பெரேரா அவர்களிடம் இருந்து அறவிடப்பட வேண்டி உள்ளது. இவர் தொடர்பில் நீதிமன்றத்தில் வழக்கு ஒன்று நிலுவையில் உள்ளதுடன் இவரது சேமலாப நிதியத்தில் இருந்து இந்தக் கடனை அறவிட ஒழுங்குகள் செய்யப் பட்டுள்ளது.

நிதிக் கூற்று தொடர்பிலான தாக்கம்	கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புகள்	கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு ஏற்கனவே முன்வைக்கப்பட்ட கருத்துரைகள்	2013 வரையில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள், தற்போதைய நிலைமையும் முன்னேற்றமும்
2.2.5சட்டங்கள், விதிகள்,பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றிற்கு இணங்காமை சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றிற்கான உசாத்துணை	சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் என்வற்றிற்கு இணங்காமை தொடர்பான சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளது. இணக்கமின்மை		
(அ) பொது வியாபார தாபன சுற்றறிக்கை இல. பீசடி/ 12 02 ஜுன் 2003 திகதியிடப்பட்டது. பந்தி 6.5.1	நிறுவகத்தின் நிதிகளை முதலீடு செய்வதற்கு பொதுத் திறைசேரியின் அனுமதி பெறப்பட வேண்டியிருந்த போதிலும் 2010 ஆம் ஆண்டில் நிலையான வைப்பில் முதலீடு செய்யப்பட்ட ரூ. 9,200,000 தொகைக்கும் 2009 ஆம் ஆண்டில் முதலீடு செய்யப்பட்ட ரூ.6,000,000 தொகைக்கும் அனுமதி பெறப்பட்டிருக்கவில்லை.	அனுமதி பெறுவதற்காக கடிதம் ஒன்று சமர்ப்பிக்கப் பட்டுள்ளது.	குறுகிய கால கற்கை நெறிகளிற்காக பெறப்பட்ட வருமான மொத்தத் தொகையில் செலவுகளுக்கு உள்ளாகக் கூடிய தொகை நிறுத்தி வைக்கப்படும் அதேவேளை எதிர்கால செலவினங்களுக்குப் போதுமான பணம் குறுகிய கால வங்கி வைப்புக்களில் வைப்புச் செய்யப்படுகின்றது. குறித்த கற்கை நெறிகள் முடிவடையும் போது, இந்த வைப்புகளில் உள்ள பணம் குறித்த செலவினங்களை ஈடு செய்யும் பொருட்டு பயன்படுத்தப்படும். நிறுவகத்தினால் பெறப்பட்ட அரச மானியம் போதாமையினால், பட்டக்

நிதிக் கூற்று தொடர்பிலான தாக்கம்	கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புகள்	கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு ஏற்கனவே முன்வைக்கப்பட்ட கருத்துரைகள்	2013 வரையில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள், தற்போதைய நிலைமையும் முன்னேற்றமும்
			கற்கைநெறிகளின் செலவினங்களுக்கும் பராமரிப்புக்கும் தேவையான பணம் வைப்புகளில் இருந்து பெறப்பட்ட வட்டியிலிருந்து பெறப்படுகின்றது. ஆகையால் நிறுவகத்தின் செயற்பாடுகளை இந்த வைப்புகள் இன்றி மேற்கொள்வது சாத்தியமற்றதாய் உள்ளது. அரசாங்கத்திற்கு சுமையின்றி நிறுவகத்தின் செயற்பாடுகளை நடாத்துவதற்கு, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினதும், உயர் கல்வி அமைச்சின் செயலாளரினதும் பரிந்துரை, 06 ஆகஸ்டு 2012 திகதியிடப்பட்ட கடிதத்தின் ஊடாக பொதுத் திறைசேரிக்கு அறிவிக்கப்பட்டு அனுமதி கோரப்பட்டுள்ளது.
2.2.6 போதிய அதிகாரத்தினால் ஆதாரப்படுத்தப்படாத கொடுக்கல்வாங்கல்கள்	2010 கல்வி ஆண்டில் தொழிலாளர் கல்வி இளமாணி பட்ட கற்கைநெறி விண்ணப்பக் கட்டணமாக விண்ணப்பதாரி ஒருவரிடமிருந்து ரூ.500 வீதம் 826 விண்ணப்பதாரிகளிடமிருந்து ரூ. 413,000 தொகை பெறப்பட்டிருந்தது. அந்தத் தொகையிலிருந்து பரீட்சை மேற்பார்வை, விடைத் தாழ்கள் திருத்துதல், விடுமுறைக் கொடுப்பனவு, மேலதிக நேரப் படி ஆகிய செலவினங்களுக்கு, 14 ஜுன் 1994 திகதிய 95	2010 ஆம் ஆண்டில் கூட முன்னைய வருடங்களைப் போன்று நிறுவகத்தின் கற்கைநெறிகளில் பணியிலுள்ள விண்ணப்பதாரிகளின் தெரிவில் அதே முறைமை பின்பற்றப் பட்டிருந்தது. கற்கைநெறிகளிற்கான சகல விண்ணப்பதாரிகளும் தொழில்புரிபவர்கள் ஆதலால், பரீட்சை அல்லது நேர்முகத் தேர்வு கிழமை நாட்களில் நடாத்துவது சரியானதல்ல.	தொழில்புரியும் விண்ணப்பதாரிகளை நிறுவகத்திற்குத் தெரிவு செய்யும் போது முன்னைய ஆண்டுகளில் பின்பற்றப்பட்ட அதே முறையே 2010 ஆம் ஆண்டிலும் பின்பற்றப் பட்டிருந்தது. சகல பரீட்சார்த்திகளும்

நிதிக் கூற்று தொடர்பிலான தாக்கம்	கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புகள்	கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு ஏற்கனவே முன்வைக்கப்பட்ட கருத்துரைகள்	2013 வரையில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள், தற்போதைய நிலைமையும் முன்னேற்றமும்
	ஆம் இலக்க பொது வியாபாரத் தாபன சுற்றறிக்கைக்கு முரணாக செலவினங்கள் மேற்கொள்ளப் பட்டுள்ளது. அவ்வாறே, கற்கைநெறி வருமானத்திலிருந்து மாணவருக்கான நலன்புரி கருத்திட்டம் ஒன்றில் பணியாற்றி அலுவலர் ஒருவருக்கான படியாக ரூ. 167,800 தொகைப் பணம் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. தொழிலாளர் கல்வி கற்கைநெறிக்கு மேற்படி அலுவலரின் தேவை பற்றி கண்காய்விற்கு சமர்பிக்கப் பட்டிருக்கவில்லை.	கற்கைநெறிகளுக்குப் பொருத்தமான மாணவர்களைத் தெரிவு செய்வதற்கு, அரசாங்க மீண்டும் வரும் செலவினங்களில் நிதி ஏற்பாடுகளின் ஊடாக நிதி ஒதுக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை. இது முன்னைய வருடங்களைப் போன்று அரசாங்க நிதியத்தைப் பயன்படுத்தும் கருத்திட்டம் ஒன்றல்லாததுடன் அரசாங்கத்திற்குச் சுமையானதல்ல. சகல கொடுப்பனவுகளும் ஏனைய கருத்திட்டங்களைப் போன்று நிறுவகத்தின் நிதிக் குழுவினால் அனுமதிக்கப்பட்ட பாத்தீட்டின் ஒத்த முறையில் மேற்கொள்ளப் பட்டிருக்கின்றது. குறித்த போதனாசிரியர்கள், அலுவலர்கள், ஏனைய ஊழியர்களுக்கான கொடுப்பனவுகள் நிதிக் குழுவினால் பரிந்துரைக்கப்பட்டு கல்விக் குழுவினால் அனுமதிக்கப்பட்ட 03.11.2011 திகதியிடப்பட்ட 306 பாத்தீட்டிற்கு இணங்க மேற்கொள்ளப்பட்டது.	தொழில்புரியும் நபர்கள் ஆதலால் பரீட்சையையோ அல்லது நேர்முகத் தேர்வினையோ கிழமை நாட்களில் நடாத்துவது முறையானதல்ல. ஆகையால் பொது விடுமுறை தினங்களும் வார இறுதி நாட்களும் பரீட்சைகளும் நேர்முகத் தேர்வுகளும் நடாத்துவதற்குத் தெரிவு செய்யப்பட்டன. இந்தக் கற்கைநெறிக்கு பொருத்தமான நபர்களைத் தெரிவு செய்வதற்கு அரச மானிய மீண்டும் வரும் ஏற்பாட்டில் நிதி ஒதுக்கப் பட்டுள்ளது. இது ஒரு தோற்றுவிக்கப்பட்ட நிதியுடன் நடாத்தப்படும் கருத்திட்டமாக இருப்பதுடன் அரசாங்கத்திற்கு சுமையின்றி நடாத்தப்படும் ஒரு கருத்திட்டமாகும். ஏனைய கருத்திட்டங்களைப் போன்று நிதிக் குழுவினால் பரிந்துரைக்கப்பட்ட

நிதிக் கூற்று தொடர்பிலான தாக்கம்	கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புகள்	கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு ஏற்கனவே முன்வைக்கப்பட்ட கருத்துரைகள்	2013 வரையில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள், தற்போதைய நிலைமையும் முன்னேற்றமும்
			பாத்தீட்டிற்கு இணங்க கொடுப்பனவுகள் மேற்கொள்ளப் படுகின்றது. கல்விக் குழுவினால் அனுமதிக்கப்பட்ட 03.11.2011 திகதிய நிதிக் குழுவின் பரிந்துரையில் கல்விக் குழு அனுமதித்த 306 பாத்தீட்டிற்கு இணங்க விரிவுரையாளர்கள், அலுவலர்கள், மற்றும் ஏனைய ஊழியர்களுக்கு விசேட கருத்திட்டத்திற்காக கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. (இணைப்பு 03)
3. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு 3.1 நிதிப் பெறுபேறுகள்	சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களுக்கு இணங்க, 31 திசெம்பர் 2010 இல் முடிவடைந்த நிறுவகத்தின் வேலைகள் அரச மானியத்தினைக் கருதிலெடுப்பதன் முன்பு முன்னைய வருடத்தின் ஒத்த துண்டு விழும் தொகையான ரூ. 12,297,565 உடன் ஒப்பிடும் போது ரூ. 18,098,126 துண்டு விழும் தொகையாக இருந்தது. அதற்கிணங்க மீளாய்வுக்கு உரிய ஆண்டிற்கான துண்டுவிழும் தொகை ரூ. 5,800,561 ஆல் அதிகரித்திருந்தது. மீளாய்வுக்குரிய ஆண்டிற்கான துண்டு விழும் தொகை மீண்டும் வரும் செலவினங்களுக்காக பெற்றுக்கொள்ளப்பட்ட ரூ. 19,000,000 அரச மானியத்தின் காரணமாக ரூ. 901,874	ஏற்றுக்கொள்ளப்பட்டது	ஏற்றுக்கொள்ளப்பட்டது

நிதிக் கூற்று தொடர்பிலான தாக்கம்	கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புகள்	கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு ஏற்கனவே முன்வைக்கப்பட்ட கருத்துரைகள்	2013 வரையில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள், தற்போதைய நிலைமையும் முன்னேற்றமும்
	மிகையாக மாற்றபட்டிருந்தது. முன்னைய வருடத்திற்கான துண்டு விழும் தொகை அந்த வருடத்திற்குப் பெறப்பட்ட ரூ. 16,806,000 அரச மானியத்தின் காரணமாக ரூ.4,508,874 மிகையாக மாற்றப்பட்டிருந்தது. ரூ. 8,089,186 இனாலான செலவின அதிகரிப்பு முன்னைய வருடத்தின் ரூ. 4,482,625 இனாலான வருமான அதிகரிப்புடன் ஒப்பிடும் போது மீளாய்வுக்குரிய ஆண்டின் மிகை ரூ.3,606,561 இனால் குறைவடைந்து முந்திய வருடத்துடன் ஒப்பிடும் போது பிரதானமாகத் தாக்கம் செலுத்தியிருந்தது.		
3.1.1 சச்சரவுத் தன்மையான கொடுப்னவுகள்	14 ஜுன் 1994 திகதிய 95 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் இரண்டாம் மற்றும் மூன்றாம் மொழி வினைத்திறமைகளுக்காக ஊக்குவிப்புப் படியாக ரூ. 78,450 தொகைப் பணம் 2010 ஆம் ஆண்டில் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. பொது முயற்சிகள் பணிப்பாளர் நாயகத்தினாலும் தேசிய பாத்தீட்டுத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினாலும் அந்தப் படிக் கொடுப்பனவு அரசாங்க விதிகள் பிரமாணங்களுக்கு முரணானது என பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு அறிக்கையிடப்பட்டிருந்த போதும் இந்தக் கொடுப்பனவு தொடர்ந்தும் மேற்கொள்ளப்படுகின்றது.	பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் இது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் இது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நிதிக் கூற்று தொடர்பிலான தாக்கம்	கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புகள்	கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு ஏற்கனவே முன்வைக்கப்பட்ட கருத்துரைகள்	2013 வரையில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள், தற்போதைய நிலைமையும் முன்னேற்றமும்
3.2 செயற்பாட்டு மீளாய்வு 3.2.1 செயலாற்றல் (அ)	பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றது. நிறுவகத்தினால் நடாத்தப்படும் பிரதான இளமாணிப் பட்டப் கற்கைநெறியான தொழிலாளர் கல்வி கற்கைநெறிக்கு 2010 ஆம் ஆண்டில் பதிவு செய்துகொண்ட மாணவர்களின் எண்ணிக்கை 126 ஆக இருந்ததுடன் முன்னைய வருடத்திலும் பார்க்க 44 மாணவர்களினால் குறைவடைந்து காணப்பட்டது.	ஏற்றுக்கொள்ளப்பட்டது. டிப்ளோமா பரீட்சையில் சித்தியடைந்து பட்டப் பரீட்சைகளுக்கு பதிவு செய்து கொண்ட மாணவர்களின் எண்ணிக்கை முன்னைய வருடத்துடன் ஒப்பிடும் போது குறைவடைந்து காணப்படுகின்றது.	இந்த வருடம் தொடக்கம் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. 2012 அளவில் 220 மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப் பட்டிருக்கின்றனர். இது 2010 ஆண்டுடன் ஒப்பிடும் போது 74 %அதிகரிப்பாகும்.
(ஆ)	2010 ஆம் ஆண்டில் கட்டணம் அறவிடும் பதினெட்டு கற்கைநெறிகள் நடாத்தப்பட்டு இருந்ததுடன் 9319 மாணவர்கள் அவற்றிற்கு பதிவு செய்து கொண்டிருந்தனர். பரீட்சைகளுக்குத் தோற்றாத மாணவர்கள் 576 ஆக இருந்ததுடன் அது பதிவு செய்யப்பட்ட மாணவர்களில் 6 வீதமாகும். சித்தியடையத் தவறியவர்களின் எண்ணிக்கை 576 ஆக இருந்ததுடன் அது பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களின் 6.6 வீதமாகும். 04 தொடக்கம் 10 மாதங்கள் கடந்திருந்தும் கூட 06 பரீட்சைகளின் பெறுபேறுகள் வெளியிடப் பட்டிருக்கவில்லை.	ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஆறில் இரண்டு பரீட்சைகளின் பெறுபேறுகள் வெளிவந்துள்ளன. கூடிய விரைவில் மீதி நான்கு பரீட்சைகளின் பெறுபேறுகளை வெளியிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பெரும்பாலான விரிவுரையாளர்கள் வெளிவாரியாக இருப்பதுடன் அவர்களுக்கு வழங்கப்படும் குறைந்த கொடுப்பனவு காரணமாக கடினமான நடவடிக்கை எடுக்க முடியாதுள்ளது.	நிறுவகத்தின் சகல பரீட்சைகளின் பெறுபேறுகளும் வெளியிடப்பட்டுள்ளன.
(இ)	கட்டணம் அறவிடும் கற்கைநெறிகளின் கட்டணங்களாக ரூ. 54,497,829 தொகை 2010 ஆம் ஆண்டில் பெறப்பட்டிருந்தது. இது முன்னைய வருடத்துடன் ஒப்பிடும் போது 14 சத வீத அதிகரிப்பாகும்.	ஏற்றுக்கொள்ளப்பட்டது.	ஏற்றுக்கொள்ளப்பட்டது. அரசாங்க நிதி ஏற்பாடுகள் போதாமையின் காரணமாக நிதிப் பிறப்பாக்கம் குறுகிய கால கற்கைநெறிகளினால்

நிதிக் கூற்று தொடர்பிலான தாக்கம்	கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புகள்	கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு ஏற்கனவே முன்வைக்கப்பட்ட கருத்துரைகள்	2013 வரையில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள், தற்போதைய நிலைமையும் முன்னேற்றமும்
			அதிகரிக்கப்பட்டுள்ளது. அரசாங்கத்திற்கு சுமையின்றி நிறுவகத்தின் செயற்பாடுகளை வினைத்திறனுடன் மேற்கொள்வது அவசியமாயுள்ளது. அதனால் இந்த வகையில் வருமானத்தினை அதிகரிப்பது அவசியமாக உள்ளது.
(ஈ)	தொழிலாளர் கல்வி பட்டக் கற்கைநெறிக்கு 2010 ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்ட மணித்தியாலங்களின் எண்ணிக்கை 1107.5 மணித்தியாலங்களாக இருந்ததுடன் அது அரை ஆண்டு முறைமைக்கமைய தீர்மானிக்கப் பட்டிருந்தது. அதற்கிணங்க முந்தைய வருடத்துடன் ஒப்பிடும் போது ஒதுக்கப்பட்ட மணித்தியாலங்களின் எண்ணிக்கை 417.5 விரிவுரை மணித்தியாலங்களினால் அதிகரித்திருந்தது. அவ்வாறே 2010 நடாத்தப்பட்ட மொத்த விரிவுரை மணித்தியாலங்களின் எண்ணிக்கை 1107.5 ஆக இருந்ததுடன் முன்னைய வருடத்துடன் ஒப்பிடும் போது 658.5 ஆக அதிகரிப்பைக் காட்டுகின்றது. நடாத்தப்பட்ட விரிவுரைகளில், 423 விரிவுரை மணித்தியாலங்கள் நிறுவகத்தின் ஐந்து உள்ளக விரிவுரையாளர்களால் நடாத்தப்பட்ட அதேவேளை 724.5 மணித்தியாலங்கள் 24 வருகைதரும் விரிவுரையாளர்களால் நடாத்தப்பட்டது. அதற்கிணங்க, உள்ளக	ஏற்றுக்கொள்ளப்பட்டது. 2006/7 கல்வி ஆண்டில் பரிந்துரை செய்யப்பட்ட புதிய பாடவிதானத்திற்கு இணங்க அரையாண்டு முறைமையில் நடாத்தப்படுகின்றது. ஆனால் இந்தப் பிரதேசம் உயர் பாதுகாப்பு வலயத்தில் அமைந்திருப்பதாக பிரகடனப்படுத்த பட்டிருப்பதனால் 2 1/2 விரிவுரை மணித்தியாலங்கள் ஒரு மணித்தியாலமாக குறைக்கப்பட்டுள்ளது. ஆகவே விரிவுரைகளை முடிவுறுத்த வேண்டிய ஆண்டில் கற்கைநெறிக் காலம் நீடிக்கப்பட்டிருக்கின்றது. ஆகவே ஒரு நாட்காட்டி ஆண்டில் கணிக்கப்பட்ட மணித்தியாலங்களின் எண்ணிக்கை கூடவாகவோ அல்லது குறைவாகவோ இருக்க முடியும். ஒவ்வொரு பாடத்திற்காகவும் ஒதுக்கப்பட்ட நேரம் 10 மணித்தியாலங்கள் ஆகும்.	தற்போதைய நாட்டின் அமைதியான சூழ்நிலையைக் கருத்திலெடுத்து சகல விரிவுரையாளர்களும் தேவையான மணித்தியாலங்களின் எண்ணிக்கையை நிறைவு செய்கிறார்கள். மேலும் நிறுவகத்தின் கற்கைநெறிகளை வினைத்திறனாக நடாத்துவதற்கு தகுதிகாண் விரிவுரையாளர் ஒருவரை ஆட்சேர்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நிதிக் கூற்று தொடர்பிலான தாக்கம்	கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புகள்	கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு ஏற்கனவே முன்வைக்கப்பட்ட கருத்துரைகள்	2013 வரையில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள், தற்போதைய நிலைமையும் முன்னேற்றமும்
	விரிவுரையாளர்களால் நடாத்தப்பட்ட விரிவுரை மணித்தியாலங்களின் எண்ணிக்கை 254 மணித்தியாலங்களினால் அதிகரித்திருந்ததுடன் வருகைதரும் விரிவுரையாளர்களினால் நடாத்தப்படும் விரிவுரை மணித்தியாலங்களின் எண்ணிக்கையும் கூட 444.5 மணித்தியாலங்களினால் முன்னைய வருடத்துடன் ஒப்பிடும் போது அதிகரித்திருந்தது.	விரிவுரையாளர்கள் அதற்கிணங்க விரிவுரைகளை நடாத்துகின்றனர்.	
3.2.2 குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்	2007 செப்டம்பர் மற்றும் 2008 பெப்பிரவரியில் ரூ.330,155 ற்குக் கொள்வனவு செய்யப்பட்ட மூன்று விரலடையாளம் பதிவுசெய்யும் இயந்திரங்களில் இரண்டு இயந்திரங்கள் திருத்தம் செய்ய முடியாத நிலையில் இருந்தது. ஆகவே அந்த இரண்டு இயந்திரங்களும் 2008 ஆம் ஆண்டிலிருந்து பயன்படுத்தப்படுவதில்லை.	இந்த இரண்டு இயந்திரங்களும் பயன்பாட்டில் பழுதடைந்ததுடன் அவை பழுதுபார்க்க முடியாத காரணத்தினால் அகற்றப்பட்டன. மேற்படி பாவனைக்கு உதவாது என பிரகடனப்படுத்தப்பட்ட உபகரணத்தை ஏலத்தில் விடுவதற்கு கல்விக் குழுவின் அனுமதி 295 ஆவது விடயத்தின் பிரகாரம் பெறப்பட்டு அதனைக் கணக்கு பதிவேடுகளிலிருந்து பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (இணைப்பு 04, 05, 06 மற்றும் 07)	கல்விக் குழுவின் 296 அனுமதியின் பிரகாரம் இந்த விடயங்கள் 2012 ஆம் ஆண்டில் கணக்குப் பதிவேடுகளிலிருந்து நீக்கப்பட்டது. (பேரேட்டு இல. 11055, 11056, 11057)
3.2.3 கூட்டிணைந்த திட்டமும் செயல் நடவடிக்கைத் திட்டமும்	2003 ஜூன் 2 ஆம் திகதிய பீஈடி 12 இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபத்தின் 5 ஆம் அத்தியாயம் 5.1.3 பந்தியின் பிரகாரம் கூட்டிணைந்த திட்டம் வருடாந்தம் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் 2009 கூட்டிணைந்த திட்டமோ அல்லது செயல்நடவடிக்கைத் திட்டமோ தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. அதன் விளைவாக நிறுவகத்தினால் ஒவ்வொரு ஆண்டிலும் அடைவதற்கு எதிர்பார்க்கப்பட்ட குறிக்கோள்களும் இலக்குகளும் என்ன	ஏற்கவே தயாரிக்கப்பட்டுள்ளது.	ஏற்கனவே தயாரிக்கப்பட்டுள்ளது.

நிதிக் கூற்று தொடர்பிலான தாக்கம்	கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புகள்	கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு ஏற்கனவே முன்வைக்கப்பட்ட கருத்துரைகள்	2012 வரையில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள், தற்போதைய நிலைமையும் முன்னேற்றமும்
	என்பதனையும் அதன் நிதிசார் மற்றும் பௌதீக செயல் முன்னேற்றத்தினையும் பரிசோதிக்க முடியாமல் உள்ளது.		
3.2.4 பாத்தீட்டுக் கட்டுப்பாடு	பீசுடீ 12 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் கூட்டிணைந்த திட்டமும் செயல்நடவடிக்கைத் திட்டமும் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் நிறுவகத்தினால் மேற்கூறிய திட்டங்களைக் கருத்திலெடுக்காது பாத்தீடு தயாரிக்கப்பட்டிருந்தது.	நிறுவகத்தின் கூட்டிணைந்த திட்டமும் செயல்நடவடிக்கைத் திட்டமும் ஏற்கனவே பூர்த்தியாக்கப்பட்டுள்ளது.	கூட்டிணைந்த திட்டமும் செயல் நடவடிக்கைத் திட்டமும் ஏற்கனவே தயாரிக்கப்பட்டுள்ளது.
4. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்	பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பில் விசேட அவதானம் தேவைப்படுகின்றது. (அ) பரீட்சை செயற்பாடுகள்	பரீட்சைகளை முறையாக நடாத்துவதற்கும் பெறுபேறுகளை உரிய நேரத்தில் வெளியிடுவதற்கும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.	நேரசூசிகைகளுக்கு அமைய பரீட்சைகளை நடாத்துவதற்கும் பெறுபேறுகளை வெளியிடுவதற்கும் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
	(ஆ) நிலையான சொத்துக்களை பதிவேடுகளுக்கு கொண்டுவருதல்	நிலையான சொத்துப் பதிவேடு தற்போது நாளதுவாக்கப் பட்டுள்ளது. எதிர் வரும் ஆண்டுகளில் இந்த நோக்கத்திற்காக கணிணி மென்பொருள் பயன்படுத்த எதிர்பார்க்கப்படுகின்றது.	நிலையான சொத்துப் பதிவேடு ஏற்கனவே நாளதுவாக்கப் பட்டுள்ளது.